Registered as a Newspaper in Ceylon
விலை சதம் 10

ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 32
National Tamil Daily தேசிய தினசரி
போன் 389 யாழ்ப்பாணம் தபால் பெட்டி எண்: 49
குரோதி மாசி 29 துல்கஃ பிறை 8 (12 3-65) வெள்ளிக்கிழமை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்

மோசடி ?

சுகாதார உதவி டைரக்டர் ஆடிட்டர் பரிசோதனை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மருந்துகளிலும் உடுப்புகளிலும் மோசடி நடைபெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட புகார்களைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து ஆடிட்டர்கள் கோஷ்டியொன்று வந்து பரிசோதனை செய்கின்றது. இச்சோதனைகள் நடைபெற்று வருவதன் விளைவாக சுகாதார சேவை உதவி டைரக்டர் திரு ஜயசேகராவும் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குவந்து விசாரணைகள் நடத்தியதாகத் தெரிய வருகிறது.

உடுப்புகள் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணைகளிலிருந்து ஆஸ்பத்திரி சலவைத் தொழிலாளர்களின் வீடுகள் சிலவற்றுக்கு இரகசியப் பொலிசார் சென்று விசாரணை செய்ததாகவும் தெரியவருகிறது.

சென்ற வருடத்தில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி நிர்வாகிகள் வெளி மருந்துச் சாலைகளிலிருந்து ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு மருந்துகள் வாங்கியிருப்பதாகவும் இதில் மோசடி நடைபெற்றிருப்பதாகவும் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இப்பொழுது விசாரணை நடைபெறுகிறதாம்.

இந்த விசாரணையின் போது ஒரு நோயாளிக்கு ஒரே தினத்தில் 178 ரூபாய் பெறுமதியான மருந்துகளும் மற்றொரு நோயாளிக்கு ஒரே தினத்தில் 140 ரூபாய் பெறுமதியான மருந்துகள் கொடுத்திருப்பதுடன்பேதிமருந்தும் கொடுத்திருப்பதாகவும் விசாரணைகளின்போதுதெரியவந்ததாம்.

மந்திரி என். எம். யாழ்ப்பாணம் வந்தார்

மாவிட்டபுரம், வெள்ளி

நிதிமந்திரியும் லங்காசமசமாஜக்கட்சித் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா நேற்றுக்காலை கொழும்பிலிருந்து விமானத்தில் பலாலி வந்து சேர்ந்தார்.

டாக்டர் பெரேரா நேற்று யாழ்ப்பாணம் வந்து சேருவாரென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் விமானத்திலா, ரயிலிலா, மோட்டார் காரிலா அவர் வருவார் என்பது பலருக்கும் தெரிந்திருக்கவில்லையாதலால் கட்சிப் பிரமுகர்களும் மற்றும் சிலருமேவிமான நிலையத்தில் அவரை வரவேற்கச் சென்றிருந்தனர்.

இடதுசாரி அபேட்சகர்களை ஆதரித்து தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவே டாக்டர் பெரேரா இங்கு வந்துள்ளார். உத்தியோகபூர்வமான ஆடம்பர வைபவங்களில் கலந்து கொள்வதற்கு அரசாங்கத்தின் நிதிமந்திரி என்ற முறையில் டாக்டர் பெரேரா யாழ்ப்பாணத்துக்கு வரும்பொழுது அவரது விஜயத்துக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் எதிர்ப்புக் காட்டுவோம் என்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் சிலவாரங்களுக்கு முன் விடுத்த அறிக்கையைக் கருத்தில் கொண்டு விமான நிலையத்தில் இரண்டு ஜீப்பிலும் ஒரு மோட்டார் 'டிரக்' வண்டியிலும் பொலிஸார் நிதிமந்திரிக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு நின்றனர்.

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன்
சொனென்ஷீன்
பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவினியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

"இலங்கை-சீன கப்பல் சேவை ஒரு வர்த்தக ஒப்பந்தமே"

வி. பி. டி. சில்வாவுக்கு பிரதமர் அறிவிக்கும் பதில்

கொழும்பு, வியாழன்

1963-ம் ஆண்டு இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே கையெழுத்திடப்பட்ட கப்பல் போக்குவரத்து ஒப்பந்தம் வர்த்தகமுறையிலானது என்றும், வர்த்தக கப்பல் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துமுகமாக செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தை பார்லிமெண்ட் அங்கீகரித்தது என்றும் பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகா விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

இந்தியாவைத் தாக்குவதற்கு வசதியாக திருமலை தளத்தை சீனாவுக்குக் கொடுக்கும் இரகசிய ஒப்பந்தம் என திரு. வி. பி. டி' சில்வா கூறியதற்கு விளக்கம் தெரிவிக்குமாறு தான் கேட்டதற்கு அவரது பதில் ஏமாற்றம் அளிப்பதாய் இருந்தது என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

"இது சம்பந்தமாக ஒப்பந்தத்தின் சகல ஷரத்துக்களையும் படிக்கும்போது அது முற்றும் ஒரு வர்த்தக ஒப்பந்தம் என்பது புலனாகும்.

காலஞ்சென்ற பிரதமர் பதவியிலிருந்தபோது திரு. பிலிப் குணவர்த்தன, திரு. வி. பி. டி' சில்வா ஆகியோரும் அந்த மந்திரி சபையில் இருந்தனர். அப்போது சீனாவுடன விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. மேலும், சீனாவுடன் வர்த்தக கப்பல்போக்குவரத்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, அது முற்றும் வர்த்தக ஒப்பந்தமல்ல என திரு வி பி டி' சில்வா கருதியிருந்தால் அப்போதே அவர் ஏன் ராஜினாமாச் செய்யவில்லை.

ஒப்பந்தத்தின் முதல்ஷரத்து போர்க்கப்பல்களையும் இலங்கைத் துறைமுகங்களில் அனுமதிப்பதாக இருக்கிறதாகக் கூறப்படுகிறது. ஆனால் எந்த போர்க்கப்பல்களும் இலங்கைத் துறைமுகங்களுக்கு வர விரும்பின் விசேஷ அதிகாரம் பெற்றே அப்படிச் செய்யமுடியும். 'மிகுந்த ஆதரவுகாட்டப்படும் நாடு' என்ற சொல்லுக்கு தவறான விளக்கம் கூறப்படுகிறது, எந்த நாட்டையும் விட குறைந்த ஆதரவு பெறவில்லை என்பதையே இது குறிக்கும்.

கோர்வையீனமே இத்தகைய விளக்கங்களுக்குக் காரணம். முடிந்து போன இந்த விஷயத்தை மீண்டும் கிளறும் விஷயத்தைப் பத்திரிகைகளும் விளம்பரப்படுத்தி தோல்வி கண்டிருக்கின்றன" என்றும் பிரதமரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டபின் இதுபற்றி பார்லிமெண்டிலும், செனட்டிலும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும், தானும் விளக்கியிருப்பதாகப் பிரதமர் கூறினார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

"மாமனாரின் தலையில் முதல் எதிரி அடித்தார்"

தலைமன்னார் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தலைமன்னார் கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அந்தனி டயஸ் என்பவர் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 63-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி மரியான் செபஸ்தியாம்பிள்ளை, மரியான் சந்தியாப்பிள்ளை ஆகியோர் பிரான்ஸிஸ் ஆரோக்கியம் மடுத்தீன் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. ஆர் சி சுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு எஸ அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார்.

டயஸ் சாட்சியமளித்தபோது கூறியதாவது-

காலஞ்சென்ற எனது மாமனாரின் வீடு, கடையிலிருந்து 40 யாருக்கு அப்பால் இருக்கின்றது. நான் கடையிலிருந்த சமயம் 2-ம் எதிரி என்னைப் பிடித்து இழுத்து அடித்தார். 'ஏனப்பா' என்று நான் கேட்டேன். பின் மாமனார் வந்தார். மாமனாரின் கடை சிறிய கடை. 1-ம் எதிரி மாமனாருக்குத் தலையில் தடியால் அடித்தார். அவர் அடிக்கும்போது நான் அடிக்க நினைக்கவில்லை. எனது சகோதரர் ஆரோக்கியம் டயஸும் நின்றார். அவர் என்னிலும் பார்க்கப் பலசாலியல்ல.

குறுக்கு விசாரணையின் போது 1-ம் எதிரி தனக்கு அடித்தால் தானும் அடித்திருப்பாரென்றும், 2-ம் எதிரி தனக்கு அடித்தால் தானும் அடித்திருப்பாரென்றும், தன்னிலும் பார்க்க தனது அண்ணன் பலசாலியல்லவென்றும் சாட்சி கூறினார். இந்நிலையில் சாட்சியின் அண்ணனாகிய ஆரோக்கியம் நீதிமன்றத்திற்குள் அழைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணையின் போது மேலும் சாட்சி கூறியதாவது:-

மாமனாருக்கு அடி விழும்போது அண்ணன் பார்த்துக் கொண்டிருந்தார். மாமனாருக்கு அடி விழுந்த சமயம் அநேகர் கூடினார்கள்.

வழ- 1ம் எதிரியும் மாமனாரும் சண்டை பிடித்தார்கள்?- இல்லை

வழ- அப்பொழுது 2ம் எதிரி வந்தார்?- இல்லை

வழ- அந்நேரத்தில் நீரும் உமது சகோதரரும் கொட்டனால் எதிரிகளை அடித்தீர்கள்?- இல்லை

வழ- அப்பொழுது பொதுச் சண்டை நடந்தது?- இல்லை

வழ-அந்நேரத்தில் எதிரிகள் காயமடைந்தனர்?- இல்லை.

மாமனார் இறந்தபின், நான் அவரின் கடையில்தான் வாழ்ந்துவந்தேன். அண்மையில் வீசிய சூறாவளியினால் கடை பலத்த சேதமடைந்தது. அதன் பின் வேறு ஒரு வீட்டில் வாழ்ந்து வருகிறேன்.

மேல் விசாரணை இன்று காலை 9-15 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடபகுதி அசைஸ் விசாரணை

இரு எதிரிகளுக்கு ஏழு வருடச்சிறை

வவுனியா கொலைமுயற்சிவழக்கில்தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வவுனியா கொலை முயற்சி வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் நேற்றுக் காலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் 1ம் எதிரி ஆசீர்வாதத்திற்கும், 2ம் எதிரி பேதுருவுக்கும் நீதியரசர் தலா ஏழு வருடக் கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

குறைந்த குற்றச்சாட்டுகளில் எதிரிகள் குற்றவாளிகள் என ஜூரிசபையினர் தெரிவித்த தீர்ப்பை நீதியரசர் ஏற்றுக் கொண்டு எதிரிகளுக்குத் தண்டனை விதித்தார்.

இவ்வழக்கில் 63ம் ஆண்டு அக்டோபர் 27ம் தேதி, ஆசீர்வாதம் என்பவர் துரைராசா, கற்பகம், சின்னத்தம்பி ஆகிய மூவரையும் கொலை செய்ய முயற்சித்ததாகவும், பேதுரு என்பவர் கொலை முயற்சிக்கு உடந்தையாக இருந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

செங்கலடியில் சிவதொண்டன் ஆசிரமம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மட்டக்களப்பு செங்கலடியில் ரூ. 75,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் சிவதொண்டன் ஆசிரமம் வருகிற 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்படவிருக்கிறது.

இந்த ஆசிரமத்துக்கு சுவாமி ஸ்ரீ சந்தஸ்வாமி பொறுப்பாக இருப்பார். (இவர் இலங்கையின் முன்னாள் கவர்னர் ஜெனரல் சோல்பரி பிரபுவின் குமாரராவர்) தற்போது செல்வச்சந்நிதியில் தங்கியிருக்கும் சுவாமி ஸ்ரீ சந்தஸ்வாமி இன்று செங்கலடிக்குப் புறப்படுகிறார்.

ஆசிரமத்தின் திறப்பு விழா சம்பந்தமாக பல விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன:

திராட்சை
திராட்சைப் பழங்கள்
விற்பனைக்கு உண்டு
சிவபாதசுந்தரம் தோட்டம்
C/o. சில்வா ஸ்டோர்,
வவுனியா. தொலைபேசி இல. 519
1673

மணிவாக்கு

சமமானவர்களிடம் போட்டி உணர்ச்சி, தமக்கு மேம்பட்டவரிடம் குறைகாண்பது, கீழ்ப்பட்டவரிடம் வெறுப்பு, தான் என்ற அகம்பாவம், முதலிய உணர்ச்சிகள், ஆண்கள் பெண்கள் எல்லாரையும் கடவுளாகவே விடாது காணப் பயில்பவர்கள் மனத்திலிருந்து சீக்கிரத்தில் நீங்கிவிடும்.

— ஸ்ரீமத் பாகவதம்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 29 உ. (12-3-65)

பேராசிரியரின் எச்சரிக்கை

இலங்கையில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலைப் பற்றி பேராசிரியர் ஜுடாயிக், லண்டன் பி. பி. ஸியில் தெரிவித்துள்ள கருத்துக்கள் இங்கு பொதுமக்களுக்குக் கவலையளிப்பதாகும். தேர்தலுக்குப் பின் இலங்கையில் அரசியல் நிலை ஒன்று ஸ்திரமில்லாமல் போகும் அல்லது புரட்சி ஏற்படுமென்று அரசியல் சோதிடம் கூறுகிருர் அவர். இலங்கையின் அரசியலை நன்குணர்ந்தவர் அவர், பொறுப்புவாய்ந்தவர். ஆகவே அவர், கூறியுள்ள இந்த எச்சரிக்கையை நாம் அலட்சியம் செய்ய முடியாது.

தேர்தல் ஜுரம் வர வர அதிகரித்துவருகிறது. போட்டி இம்முறை அதிக கடுமை. எந்தக்கட்சி வெல்லும் என்று இறுதியாகச் சொல்ல முடியாதபடியுள்ளது. எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி பலம் இல்லாமல் போகலாம். அப்படி ஒரு கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைத்தாலும், அது அமைதியாக அரசாங்கம் அமைத்து நடத்தமுடியுமா? பலாத்காரம் தலை தூக்கி பேராசிரியர் கூறுவதுபோல் புரட்சி ஏற்படுமா? என்று பலபல கேள்விகள் நம் மனத்தில் ஏற்படுவதற்கவுள்ளன. துவேஷமும் கசப்பும் கலந்து நடைபெறும் போட்டாபோட்டி பிரசாரங்களைப் பார்க்கையில் இவ்வித கவலைகள் ஏற்படுவது இயற்கை.

இலங்கையில் ஜனநாயகம் அமைதியாக நடக்கவும், நமது பல தேசியப் பிரச்னைகள் தீர்ந்து நாடு முன்னேறவும் வேண்டுமென்பதுதான் பொதுமக்களின் உண்மையான ஆவல். பலாத்காரப் புரட்சியோ அரசியல் ஸ்தம்பிதநிலையோ ஏற்படவேண்டுமென்று, யாருக்கும் விருப்பம் கிடையாது. ஆகவே அவ்வித நிலைமை ஏற்படாமல் தடுக்க, எல்லாக் கட்சியினரும், கூடுமான முயற்சியைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்ருர்கள். உணர்ச்சி வேகத்திலும், அனுபவமற்ற நிலையிலும் இங்கு ஜனநாயகத்திலே சில தவறுகள் நடந்திருக்கலாம். ஆனல் பொதுமக்களின் மேலான நன்மையையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றவேண்டிய பொறுப்பு எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உண்டு.

எக்காரணம் பற்றியும் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்படுமாயின், அதனல் தமிழ் பேசும் மக்களுக்கே அதிக சங்கடம் ஏற்படுவதாக இருக்கும். பழைய அனுபவங்களே இதற்கு அத்தாட்சி. ஆகவே அவ்வித நிலை ஏற்படாமல் தடுக்க, வடக்கு, கிழக்கு மாகாண பிரதிநிதிகள் தங்களது சக்தியையும் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் எந்த அரசாங்கமும் ஸ்திரமாக இருந்து நடத்த வேண்டுமாயின், அதற்கு தமிழ் மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிக அவசியமென்பதை சென்ற பத்து வருட கால நிகழ்ச்சிகள் நிரூபித்துள்ளன. தமிழ்ப் பிரதிநிதிகள் யாரும் மந்திரிசபையில் இல்லாததால் நாட்டில் அமைதியோ, சமூக நல்லுறவோ இல்லாமலும் நாட்டின் பிரச்னைகள் எதுவும் தீரமுடியாமலும் போயிற்று. இனி வரும் ஆட்சியிலாவது இந்தப் பெரிய குறை தீரவேண்டும்.

மொழி, வேலையில்லாக்கஷ்டம், வாழ்க்கைச்செலவுஉயர்வு, உணவு உற்பத்தி போன்றவை தேசியப் பிரச்னைகள். இப்பிரச்னைகளை வெற்றிகரமாகத் தீர்க்க, தேசிய முயற்சியே தேவை. இதற்கு தமிழர் உள்ளிட்டு எல்லாக்கட்சிப் பிரதிநிதிகளுமடங்கிய தேசிய அரசாங்கம் அமைக்கப்படமுடியுமாயின் அது பெரிதும் வரவேற்கத்தக்கது. அதற்கான விதத்தில் தமிழரின் பிரதிநிதிகள் தீர்க்கதரிசனத்துடனும் தேசாபிமானத்துடனும் தங்கள் செல்வாக்கை ஆக்க முறையில் பயன்படுத்தக்கூடிய சமயம் நெருங்கிவருகின்றது. எப்படியும் இங்கு தேர்தலுக்குப்பின் பலாத்காரப் புரட்சியோ, அரசியல் ஸ்திரமற்ற நிலையோ ஏற்படுவதை தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் மேலான நன்மையைக் கருதியாவது தடுக்கவும், வருகிற தேர்தல் மூலம் தமிழ் மக்களின் குறைகள் கூடுமானவரை தீரக்கூடிய வழிவகைகளைச் செய்யவும் வேண்டும்.

சமயபபிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொது ஜனசேவைச்சங்க சமயப்பிரசாரசபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் இன்று மாலை பிரசங்கங்கள் நிகழ்த்தப்படும்.

நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் திரு த சுப்பிரமணியம் 'சிறுத்தொண்டர்' எனும் பொருள்பற்றியும் நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜேஸ்வரியம்மன் ஆலயத்தில் பண்டிதர் இரா சிவசுப்பிரமணியம் 'ஆலயவழிபாடு' எனும்பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றுவார்கள்

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் ஸ்ரீமத் சி எஸ எஸ மணிபாகவதர் சம்பூர்ண இராமாயணத்தொடரில் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்

உங்கள் அபேட்சகர்கள்

பொதுத் தேர்தலுக்கு இன்னும் பத்துத் தினங்களே இருக்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களை உங்களுக்கு இங்கு அறிமுகப்படுத்துகின்ருேம்.

பருத்தித்துறை

திரு. க. துரைரத்தினம்

தமிழரசக் கட்சியின் இளம் எம். பி யாக 1960-ம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு பருத்தித்துறைத் தொகுதிப் பிரதிநிதியாகச் சென்ற இவர் சமீபத்தில் பார்லிமெண்ட் கலைக்கப்படும்வரை பருத்தித்துறைத் தொகுதிக்குப் பிரதிநிதித்துவம் வகித்திருக்கிருர். ஆங்கிலத்திலும் தமிழிலும் பாண்டித்தியமுடைய திரு. துரைரத்தினம் சிறந்த பேச்சாளருமாவார். வடக்குப் பகுதி வரண்ட பிரதேசமானலும் பாலைவனத்தையேசோலைவனமாக்கிய இஸ்ரேல் மக்களைப் போன்று வடபகுதி மக்களும் தமது பிரதேசத்தை உருவாக்க முடியுமென்றும் இதற்கு அவர்களுக்கு சுயாட்சி உரிமை வேண்டுமென்றும் வலியுறுத்தி வருபவர். பொருளாதாரப் பட்டதாரி. ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. துரைரத்தினம் அரசியலில் பிரவேசித்து தமிழரசுக்கட்சி நடாத்திய தமிழ் உரிமைப் போராட்டங்களில் பங்குபற்றித் தடுப்பு காவலிலும் இருந்திருக்கிருர்.

திரு. என். நடராசா

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான இவர் பருத்தித்துறை நகரசபையின் தலைவராகப் பதவி வகிக்கிருர். பருத்துறைப் பட்டின சபையின் தலைவராகப் பதினைந்து வருடங்கள் பதவி வகித்த இவர் இருபது வருடகாலமாகப் புரக்டராகத் தொழில் புரிந்து வருகிருர். 1947-ம் ஆண்டில் அரசியலில் தீவிரமாகப் பங்கு கொண்ட திரு. நடராசா 1960-ம் ஆண்டு நடைபெற்ற இரு பொதுத் தேர்தல்களிலும் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டு இரண்டாவது இடத்தையடைந்தார். இம்முறையும் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடுகிருர்.

திரு. கு. மோதிலால்நேரு

1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி வல்வெட்டித்துறையில் பிறந்த திரு. மோதிலால் நேரு அரசாங்க மின்சார திணைக்களத்தில் லிகிதராகக் கடமையாற்றிக் கொண்டே சட்டப்படிப்புப் படித்து வழக்கறிஞராகச் சித்தியடைந்தவர். கொழும்பு வை. எம். ஸி ஏ. விவாத அரங்கில் "சபாநாயகர்" பதவிவரை வகித்த இவர் இன்றும் அந்த அரங்கில் 'எதிர்க்கட்சித் தலைவராக'வும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகவும் இருக்கிருர். 1955-ம் ஆண்டுத் தேர்தலில் பருத்தித்துறையில் திரு. பொன். கந்தையாவை ஆதரித்துப் பொதுக் கூட்டங்களில் எட்டு வயதுச் சிறுவனுக இருந்தபோதே உரைநிகழ்த்தி அரசியல் பிரசாரம் செய்தார் இடதுசாரி அபேட்சகராக இம்முறை இவர் இத்தொகுதியில் போட்டியிடுகிருர்.

பொதுத்தேர்தலும் அரசியல்கட்சிகளும்-5

கோப்பாய், யாழ்ப்பாணம் தொகுதிகள்

கோப்பாய் தொகுதியில் 1947-ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது மூன்று அபேட்சகர்கள் போட்டியிட்டனர். காலஞ்சென்ற திரு. ஸி. வன்னியசிங்கம் தமிழ்க்காங்கிரஸ் சார்பிலும், திரு. எஸ். இராசரத்தினம் ஐக்கிய தேசியக் கட்சிசார்பிலும், திரு. சி. இரகுநாதன் சுயேச்சையாகவும் போட்டியிட்டனர். 1952-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ஸி வன்னியசிங்கம், சி. அருணம்பலம், ஆர். ஆர். தர்மரத்தினம், ஆகியோர் போட்டியிட்டனர். 1956-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவாளர்கள் கு. வன்னியசிங்கமும், சி. அருணம்பலமும் நேரடியாகப் போட்டியிட்டனர்.

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எம். பாலசுந்தரம், ரி. குணரத்தினம், எஸ். கே. நல்லதம்பி, கே. வி. எஸ். சண்முகநாதன், எஸ். பி. நடராசா, எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் போட்டியிட்டனர். 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது திருவாளர்கள் எம். பாலசுந்தரமும், டி. குணரத்தினமும் போட்டியிட்டனர்.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எஸ். கதிரவேற்பிள்ளை, ரி. குணரத்தினம், எம். துரைராசா, எம். பாலசுந்தரம் ஆகியோர் பங்குபற்றுகின்ருர்கள். இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளரின் தொகை 38,091.

யாழ்ப்பாணத் தொகுதியில் 1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலமும் ஏ. மகாதேவாவும் போட்டியிட்டனர்.

1952-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலமும் இ. எம். வி. நாகநாதனும் போட்டியிட்டனர். 1956-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் ஜி ஜி. பொன்னம்பலம், ஈ. எம். வி. நாகநாதன், ஏ. விஸவநாதன் ஆகியோர் போட்டியிட்டனர்.

1960-ம் ஆண்டு மார்ச்மாதம் நடைபெற்ற தேர்தலில் திருவாளர்கள் ஏ. ரி. துரையப்பா, ஜி ஜி. பொன்னம்பலம் எஸ. கதிரவேற்பிள்ளை, ஏ. விஸவநாதன் ஆகியோர் போட்டியிட்டனர். 1960-ம் ஆண்டு ஜூலைமாதம் நடைபெற்ற மறு தேர்தலின்போது திருவாளர்கள் ஆல்பிரட் துரையப்பா, ஜி ஜி. பொன்னம்பலம், எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் போட்டியிட்டனர்.

1965-ம் ஆண்டு மார்ச்மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ஏ. ரி. துரையப்பா ஜி. ஜி. பொன்னம்பலம், சி. எக்ஸ். மார்ட்டின் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத் தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொத்தவாக்காளர்களின் தொகை 28,478.

நல்லூர் தொகுதி 1947-ம் ஆண்டில் யாழ்ப்பாணத் தொகுதியுடனும், கோப்பாய்த் தொகுதியுடனும் சேர்க்கப்பட்டிருந்தது. 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் இ. எம். வி. நாகநாதன், ஸி. அருளம்பலம், ஏ. துரைராஜசிங்கம், எம். கார்த்திகேசன், ஆர். வி. மன்மதராஜன், சி. சின்னத்துரை ஆகியோர் போட்டியிட்டனர். 1960-ம் ஆண்டு ஜூலைமாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் இ எம் வி நாகநாதனும், ஸி அருளம்பலமும் போட்டியிட்டனர்

1965-ம் ஆண்டு மார்ச்மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ஸி அருளம்பலமும், இ எம் வி நாகநாதனும், ஏ விஸ்வநாதனும் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் தொகை 31,864.

"புயல் சமயத்தில் உதவிசெய்தோம்"

காங்கேசன்துறை, வியா.

'சமீபத்தில் வீசிய சூறாவளி காரணமாக காங்கேசன்துறை பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்வழங்க நானும் காங்கேசன்துறை பட்டினசபை அங்கத்தவரான திரு. சிவனடியாரும் முன்னின்ருேம் என்பதை எடுத்துக் கூறவிரும்புகின்றேன். வீண் வதந்திகள் பரப்பப்படுவதாலேயே இதனை நான் வெளியிடவேண்டியிருக்கிறது.'

இவ்வாறு மயிலிட்டியிலுள்ள கிராமக்கோர்ட்டுக்கு அண்மையிலுள்ள மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி தேர்தல்பிரசாரக்கூட்டத்தில் பேசிய பருத்தித்துறை முன்னாள் எம். பி. திரு. துரைரத்தினம் கூறினர்.

காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடும் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. துரைரத்தினம் தமது கூற்றுக்கு ஆதாரமாக தாம் அரசாங்கத்துடன் அப்பொழுது கொண்ட தொடர்புகள் சம்பந்தமான கடிதங்களை வாசித்துக்காட்டியபின் தாம் மேற்கூறிய விஷயத்தைப் பொய் என நிரூபித்தால் தாம் தேர்தல்போட்டியிலிருந்து விலகிவிடுவதாகக் கூறினர்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்படப் பலர் பேசினர்.

மன்னார் தாம்போதி திருத்தப்பட்டது

மன்னார், வியாழன்

சமீபத்தில் வீசிய சூறாவளி காரணமாக சேதமடைந்த இரண்டு மைல் நீளமுள்ள மன்னார் தாம்போதி, இராணுவத்தினரால் திருத்தப்பட்டு மீண்டும் பாவிப்புக்கு சென்ற திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த இந்த தாம்போதியை இராணுவத்தினர் 46 நாட்களுக்குள் கட்டிமுடித்தனர்.

"இஸ்ரேலை அங்கீகரித்தால் கி. ஜெர்மனியை அங்கீகரிப்போம்"

மேற்கு ஜெர்மனிக்கு ஜனாதிபதி நாஸர் எச்சரிக்கை

கெய்ரோ, மார்ச் 11

மேற்கு ஜெர்மனி இஸ்ரேலை அங்கீகரித்தால், கிழக்கு ஜெர்மனியை ஐக்கிய அராபியக் குடியரசு அங்கீகரிக்கும் என ஜனாதிபதி நாஸர் அறிவித்திருக்கிறார்.

அத்துடன் ஐக்கிய அராபியக் குடியரசிலுள்ள கிழக்கு ஜெர்மன் பாடசாலைகள், சொத்துக்கள் முதலியவற்றையும் தனது அரசாங்கம் மேற்கொள்ளும் என அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இஸ்ரேல் அங்கீகரிக்கப்பட்டால், கெய்ரோவில் கூடிய அரபு நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு சகல அரபுநாடுகளும் மேற்கு ஜெர்மனியுடன் ராஜிய, பொருளாதாரத் தொடர்புகளை முறித்துக்கொள்ள முடிவுசெய்திருப்பதாகவும் ஜனாதிபதி நாஸர் கூறினார்.

ஏற்கனவே ஐக்கிய அராபியக் குடியரசு, ஜோர்டான், ஈராக், சாவூதி அராபியா ஆகிய நாடுகள் தங்கள் ஸ்தானிகர்களை மேற்கு ஜெர்மனியிலிருந்து திருப்பி அழைத்துக் கொண்டுவிட்டன.

"காஷ்மீரில் மோசமான நிலை உருவாகிறது"

இந்தியாமீது பூட்டோ கண்டனம்

கராச்சி, மார்ச் 11

காஷ்மீரில் வாக்குரிமைமுன்னணித் தலைவர்கள் கைது செய்யப்படுவதை எதிர்த்து அவாமி செயல்கமிட்டி பெரிய இயக்கம் நடத்த முடிவு செய்திருக்கிறது. நேற்று 6 தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ விடுத்துள்ள ஓர் அறிக்கையில் முன்னணித் தலைவர்கள் கைதுசெய்யப்படுவதைக் கண்டித்திருக்கிறார்.

இந்தியா, ஏகாதிபத்தியத்தைப் போல் நடந்து கொள்கிறது என்றும் காஷ்மீரில் மோசமான நிலைமை உருவாகி வருகிறதென்றும் அவர் கூறினார்.

"சரித்திரத்திலிருந்து பாடங் கற்க இந்தியா தவறினால் பெரும் நாசமே அதற்கு ஏற்படும்" என்றும் அவர் கூறினார்.

ரொடீஷிய பிரச்னைக்கு பரிகாரம் சாத்தியமே

பிரிட்டிஷ் மந்திரி நம்பிக்கை

லண்டன், மார்ச் 11

சகல ரொடீஷியர்களுக்கும் சுதந்திரமும், சுபீட்சமும் ஏற்படும்வகையிலான ரொடீஷிய அரசியலமைப்பு பிரச்னைக்கு பரிகாரம் காண்பதில் தாம் நம்பிக்கை இழக்கவில்லை என பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. பொட்டம்லி கூறினார்.

"ஆனால் பலாத்காரம் மூலம் பெரும்பான்மை ஆட்சியை அங்கு புகுத்துவது அரசாங்கத்தின் நோக்கமல்ல" என்றும் அவர் கூறினார். தானும் கார்டினர் பிரபுவும் சமீபத்தில் மேற்கொண்ட ரொடீஷிய சுற்றுப்பிரயாணத்தின் போது, ஆபிரிக்கர்களால் மேற்கொள்ளப்பட்ட பலாத்காரம், பயமுறுத்தல் ஆகியவற்றைக் கண்டித்ததாக அவர் கூறினார்.

"எங்கள் ரொடீஷிய விஜயத்தின்போது அரசாங்கத் தலைவர்களுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதுடன், பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களையும் கேட்டறிய வாய்ப்பு பெற்றோம்.

ரொடீஷிய பிரதமர், இதர மந்திரிகள் ஆகியோரை நாங்கள் சந்தித்தபோது துரிதமாகச் சுதந்திரம் வேண்டுமென்ற பெரும்பான்மை வெள்ளையர்களின் கருத்தை அவர்கள் வெளியிட்டனர்.

திரு. சிதோலுக்கு அடுத்தபடியாக உள்ள திரு. நிகோமோ, திரு. தகாவிரா ஆகிய தலைவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கம் அரசியலமைப்பு மகாநாடொன்றை உடனடியாகக் கூட்டவேண்டும் என்றும், தங்களையும், தங்கள் சகாக்களையும் உடன் விடுதலைசெய்ய வேண்டுமென்றும் கோரினார்கள். அவசியமானால் ஆயுதப் படையைப் பிரயோகித்து பெரும்பான்மை ஆட்சியை அங்கு ஏற்படுத்தவேண்டும் என பிரிட்டிஷ் அரசாங்கத்தை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

ரொடீஷிய ஆதிவாசித் தலைவர்கள் ஆபிரிக்க தேசிய எழுச்சியினால் தங்கள் அதிகாரம் பாதிக்கப்படுமெனக் கருதியதுடன், இந்த தேசிய எழுச்சியை அடக்க உடனடியாக சுதந்திரம் வழங்கவேண்டும் எனவும் கூறினார்கள்.

சில ஐரோப்பியர்கள், பேச்சுவார்த்தை மூலம் உடனடியாகச் சுதந்திரம் கிட்டாவிடில் ஒரு தலைப்பட்ட பிரகடனத்தின் மூலம் அதைக் கைப்பற்றவேண்டுமெனக் கருதினார்கள். ஆபிரிக்கர்களும் ஐரோப்பியர்களும் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியாததே தென்ரொடீஷியாவிலுள்ள குறைபாடாகும். அங்குள்ள சகல நிற மக்களின் தலைவிதியும் அவர்கள் கையிலேயே இருக்கிறது" என்றும் திரு. பொட்டம்லி கூறினார்.

வில்ஸனின் 3 பிரயாணங்கள்

லண்டன், மார்ச் 11

திரு. ஜோன்ஸனின் அழைப்பிற்கிணங்க பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் அடுத்த மாதம் மீண்டும் அமெரிக்கா செல்லவிருக்கிறார். நியூயோர்க்கில் அவர் யூதாண்டைச் சந்தித்துப் பேசுவார். அதன்பின் பாரிஸ், ரோம் ஆகிய நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்வார்.

பாகிஸ்தானுக்கு ரூ. 45 கோடி கடன்

கராச்சி, மார்ச் 11

பாகிஸ்தானின் அபிவிருத்திக்கு 45 கோடி ரூபாய் கடனளிக்க உலக வங்கி முன்வந்திருக்கிறது.

1000 நாகர் பிரவேசிக்க முயற்சி

புதுடில்லி, மார்ச் 11

ஆயுதம்தரித்த 1000 பகை நாகர்கள் பாகிஸ்தானிலிருந்து நாகாலந்தில் பிரவேசிக்க முயன்றுவருவதாக நாகா தலைவர் ஷிலு ஆவோ கூறினார்.

உரிமைப் பிரச்னை நிராகரிப்பு

சென்னை, மார்ச் 11

திரு. எம். எல். ஏ. (தி. மு. க.) பொலிசாரினால் அடித்துக் கொடுமைப்படுத்தப்பட்டதாக திரு மாதவன் (தி. மு. க.) கொண்டுவந்த உரிமை பிரச்னையைசபாநாயகர் செல்லபாண்டியன் நிராகரித்தார். ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது காவலில் வைக்கப்பட்ட ராஜாங்கம் இவ்வாறு நடத்தப்பட்டதாக மாதவன் கூறினார்.

ஆனால் இதில் உரிமை பிரச்னை எதுவும் இல்லை என்றும், சிவில் காரணங்களுக்காகவன்றி கிரிமினல் குற்றங்களுக்கு உரிமைப் பிரச்னை பொருந்தாது என்றும் சபாநாயகர் கூறினார்.

பொலிசார் அடித்துக்கொடுமைப்படுத்தியதாகக் கூறப்படுவதை முதன் மந்திரி திரு. பக்தவதசலம் மறுத்தார்.

அந்தமானில் குடியேற்ற யோசனை

புதுடில்லி, மார்ச் 11

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வரும் மக்களை அந்தமானில் குடியேற்ற நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த 400 குடும்பங்கள் அங்கு குடியேற்றப்பட்டிருக்கின்றன. மேலும்1000 குடும்பங்கள் அங்கு குடியேற்றப்படவிருக்கின்றன.

தடையை மீறி நீக்ரோக்கள் ஊர்வலம்

அலபாமா, மார்ச் 11

அலபாமாவில் நேற்று நீக்ரோக்கள் மீண்டும் தடையை மீறி ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலத்தில் 500 நீக்ரோக்கள் கலந்துகொண்டனர். எனினும் துருப்புக்கள் இந்த ஊர்வலத்தை நிறுத்திவிட்டன. சுமார் 1000 நீக்ரோ மாணவர்களும் ஆதரவு தெரிவித்து ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

பீகிங் தாக்குதல்

பீகிங், மார்ச் 11

மாஸ்கோவில் நடைபெற்ற 19 கம்யூனிஸ்ட் நாடுகளின் அறிக்கையைத் தொடர்ந்து சீனப் பத்திரிகை "பீபிள்ஸ் டெய்லி" எழுதியுள்ள தலையங்கத்தில் ரஷ்யாவில் குருஷ்சேவின் கொள்கைகள் பின்பற்றப்படுவதாக மீண்டும் தாக்கியிருக்கிறது.

100 வியட்காங் வீரர்கள் கொல்லப்பட்டனர்

வியட்னாம் பிரச்னையைத் தீர்க்க பல முயற்சிகள்

சைகோன், மார்ச் 11

தென்வியட்னாம் மத்திய பகுதியில் அரசாங்கத் துருப்புக்கள் கொரில்லாக்கள் வசமிருந்து ஒரு முக்கிய சப்ளை பாதையைத் திரும்பவும் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்காக நடைபெற்ற சண்டையில் பல வியட்காங்கியர் கொல்லப்பட்டதாயும், இப்பாதையைத் தடுக்க மீண்டும் மீண்டும் கொரில்லாக்கள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டதென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

டர்லேர் தாக்குதலில் வியட்காங்கியருக்கு பெரும் சேதம் ஏற்பட்டதென்றும் 100 வியட்காங் வீரர்கள் கொல்லப்பட்டதாயும் மற்றும் 200 பேருக்கு சேதம் ஏற்பட்டதென்றும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கா நிராகரிப்பு

இதேசமயம் வியட்னாம் பிரச்னையைத் தீர்க்க ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் தெரிவித்திருந்த யோசனையை அமெரிக்கா நிராகரித்துவிட்டதாய்க் கூறப்படுகிறது.

சீனா, வடவியட்னாம் உள்ளிட்ட 7 நாடுகள் அடங்கிய பூர்வாங்க மகாநாடு ஒன்றுக்கு யுதாண்ட் யோசனை கூறியிருந்தார். எனினும் அவர் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்வார் என ஐ. நா. வட்டாரங்கள் அறிவித்தன.

ரஷ்யா பதில் இல்லை

வியட்னாம்பற்றி பிரிட்டன் தெரிவித்திருந்த யோசனைகளுக்கு ரஷ்யாவிடமிருந்து பதில் இன்னும் கிடைக்கவில்லை என்றும் அடுத்தவாரம் சோவியத் வெளிநாட்டுமந்திரி திரு குரோமிக்கோ லண்டன் வரும்போது அதைக் கொண்டு வரக்கூடும் என்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்ட் அறிவித்தார். ரஷ்யாவுடன் இவ்விஷயமாக இடைவிடாது தொடர்பு கொண்டிருப்பதாயும் அவர் கூறினார்.

இதற்கிடையில் தொழிற்கட்சி எம். பி.க்களின் குழு ஒன்று அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் வியட்னாமில் கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறியிருக்கிறது.

வியட்னாம்பற்றி ஆலோசிக்க பெல்கிரேட்டில் இலங்கை உட்பட மண்டலசார்பற்ற நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய மகாநாடு ஒன்று நடைபெறுகிறது.

நீக்ரோ வாக்குரிமை மசோதா

தலைசிறந்த அமெரிக்க நிபுணர்கள் தயாரிக்கின்றனர்

வாஷிங்டன், மார்ச் 11

உத்தேச வாக்குரிமை மசோதாவைத் தயாரிப்பதில் அமெரிக்காவின் தலைசிறந்த வழக்கறிஞர்கள் ஈடுபட்டிருப்பதாயும், ஏனெனில் இந்தமசோதா பலனுள்ளதாய் இருக்கவேண்டும் என ஜனாதிபதி ஜோன்ஸன் விரும்புவதாயும் வெள்ளைமாளிகை அறிவிப்பொன்று கூறுகிறது.

ஜனாதிபதியும் நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கும் நடத்திய 90 நிமிட சம்பாஷணையில் தென்கோடி வரையில் நீக்ரோக்களுக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டம்பற்றி விவாதிக்கப்பட்டதாய் வெள்ளைமாளிகை உதவி பத்திரிகை அதிகாரி திரு. ஜோஸப்லேடின் கூறினார்.

ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியபின் நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் நிருபர்களிடம் பேசுகையில் காங்கிரஸின் நடப்புக்கூட்டத்திலேயே சக்திமிகுந்த வாக்குரிமை மசோதா நிறைவேற்றப்படும் எனத் தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாய்க் கூறினார். நீக்ரோ வாக்குரிமையைப் பாதுகாக்க ஜனாதிபதி ஜோன்ஸனிடம் தாம் சிபார்சு செய்த பல யோசனைகள் ஜனாதிபதியுடன் ஆராயப்பட்டதாய்க் கூறினார்.

இவ்விஷயமாக சமீபத்தில் காங்கிரஸில் இரு அரசியல் கட்சித் தலைவர்களும் விடுத்த அறிக்கைகள் தமக்கு ஊக்கமூட்டுவதாய் இருக்கிறதென்றும் அவர் கூறினார்.

எம். எல். ஏ. சஸ்பெண்ட்

லக்னோ, மார்ச் 11

உத்தர பிரதேச சட்டசபையில் எதிர்க்கட்சியின் உபதலைவர் சபையிலிருந்து ஒரு வாரம் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். சபாநாயகர் உத்தரவை மீறி காரசாரமான வாக்குவாதத்தில் அவர் ஈடுபட்டார்.

இந்தியபார்லிமெண்டில் வெளி நடப்பு

புதுடில்லி, மார்ச் 11

கேரளத்தில் தடுப்புக் காவலிலிருக்கும், தேர்தலில் வெற்றி பெற்ற 29 மார்க்ஸிய வாதிகளை விடுதலை செய்யும் பிரச்னையே இல்லை என உள்நாட்டு மந்திரி திரு. நந்தா அறிவித்ததைத் தொடர்ந்து பார்லிமெண்டின் இரு சபைகளிலும் நேற்று அமளி ஏற்பட்டது.

இதன் காரணமாக 2 கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இரு சபைகளிலும் பின்பு கம்யூனிஸ்ட் அங்கத்தினர்களும், சோஷலிஸ்ட், சுயேச்சை அங்கத்தினர்களும் வெளியேறினார்கள்.

டென்மார்க் அரசருக்கு வாழ்த்து

புதுடில்லி, மார்ச் 11

டென்மார்க் மன்னரின் பிறந்தினத்தை முன்னிட்டு ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

எடின்பரோ கோமகன்

புதுடில்லி, மார்ச் 11

டில்லி வந்திருக்கும் பிரிட்டிஷ் மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகன் நேற்று காந்தி, நேரு சமாதிகளுக்கு மலர் வளையம் வைத்தார்.

வங்க எழுத்தாளர் காலமானார்

கல்கத்தா, மார்ச் 11

பிரபல வங்காள எழுத்தாளர் கிர்ஜா சங்கர்ராய் சௌத்ரி கல்கத்தாவில் காலமானார், அவருக்கு வயது 80.

"சமஷ்டி அமைப்பில் சுயாட்சி தமிழரசு நிறுவுவதே இலட்சியம்"

முன்னாள் எம். பி. விளக்கம்

உடுப்பிட்டி, வியாழன்

"தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் அடைந்திருக்கும் அவலநிலைக்குக் காரணம் சிங்கள இனத்தை ஆளும் இனமாகவும், தமிழ் பேசும் மக்களை ஆளப்படும் மக்களாகவும் ஆக்கியிருக்கும் ஒற்றையாட்சி அமைப்பேயாகும். பதினாறு வருடச் சிங்கள ஆட்சியில் தமிழ் பேசுமினம் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுவிட்டது. நாம் தொடர்ந்தும் ஒரு தனியினமாக வாழவேண்டுமானால், நமது தமிழ் மொழியையும், நமது இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களையும் நமக்கே உரித்தான பிரதேசத்தையும் நமது பாரம்பரியமான பண்பாடு, கலாச்சாரங்களையும் பேணிப் பாதுகாக்கவேண்டும். இதற்கொரே வழி நமது பிரதேசத்தை நாமே ஆளும் உரிமையைப் பெறுதலே. ஐக்கிய இலங்கை சமஷ்டியின் அங்கமாக சுயாட்சித் தமிழரசையும், முஸ்லிம் அரசையும் நிறுவி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் விடுதலையைக் காண்பதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நோக்கமாகும்."

இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதி தமிழரசு அபேட்சகர் திரு. க. துரைரத்தினம் தம்மை ஆதரிக்குமுகமாக பொலிகண்டி கந்தசாமி கோவிலுக்கண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. துரைரத்தினம் மேலும் கூறியதாவது:-

நமது நாட்டைப் பொருளாதார வளம் குன்றியது என்று பயமுறுத்துகிறார்கள். சின்னஞ்சிறிய நாடான இஸ்ரவேலில் எவ்வித பொருளாதார வளமற்ற நிலையில் அங்குள்ள மக்களின் முயற்சியால் பாலைவனமான அந்நாட்டைச் சோலைவனமாக்கியுள்ளபோது நல்ல மண்ணையுடைய நமது நாடு மாத்திரம் பொருளாதாரவளம் குன்றியது என்று கூறுபவர்களுடன் பகிரங்கமாக வாதிட நான் தயாராகவிருக்கிறேன். அரசாங்கத்தின் சிங்களக்குடியேற்றத்தினால் எமது பிரதேசம் பறிபோவதோடு பாராளுமன்றத்தில் எமது பிரதிநிதித்துவமும் பறிபோய்க்கொண்டு வருகிறது. சிங்களக் குடியேற்றத்தின் விபரீத விளைவுகளை அம்பாறைப் பிரதேசம் நமக்குப் புரியவைக்கிறது. இக்குடியேற்றத்தைத் தடுப்பது நமது தலையாய கடமை.

உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. ஜெயக்கொடி பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

இந்நாட்டில் சிங்கள மக்களும், தமிழ்பேசும்மக்களும் சமத்துவமும் சமசந்தர்ப்பமும் பெறவேண்டுமானால் சிங்கள மொழியும் தமிழ்மொழியும் நாடுமுழுதும் சமஅந்தஸ்து பெறவேண்டும். சிங்கள மக்களுக்குச் சிங்களம் எப்படியோ தமிழ்பேசும்மக்களுக்குத் தமிழ் அப்படியே சட்டபூர்வமாக இருக்கவேண்டும். சிங்களம் மட்டும் என்ற நிலையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழ்க்குழந்தைகள் தமது வருங்காலத்தில் சுதந்திரமாக வாழவேண்டுமானால் தன்மானங்காக்கப் போராடிவரும் தமிழரசுக்கட்சிக்கே வாக்குகளை அளிக்கவேண்டும்.

மலையகத்தமிழர் திரு. தென்னரசு பேசுகையில்:-

"பெரும் பான்மை இனம் வாழும் ஓர் நாட்டில் சிறுபான்மையினமும் கூடி வாழ்ந்தால் சிறுபான்மை இனத்தின் மொழி அழியும் என்பதற்குச் சிலாபம், புத்தளப்பகுதி மக்கள் சாட்சியாக விளங்குகிறார்கள் என்றார். வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், அரசியலில் தனிப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்றும் தனிப்பட்டவர்களின் வளர்ச்சிக்காக நாம் போராடவில்லையென்றும் கூறினார்.

திருவாளர்கள் அட்வகேட் ஆலாலசுந்தரம், செனட்டர் மாணிக்கம் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

"சிங்களம் படித்தாலும் தமிழ் ஊழியருக்கு 'நன்மையில்லை"

கோடீஸ்வரன் பேச்சு

உடுப்பிட்டி, வியா.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிப்பதில் எவ்வித நன்மையும் ஏற்படாது. இவர்கள் நான்கு வருடங்களில் எட்டாம் வகுப்புச் சிங்களப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்றும் அப்படிச் சித்தியடைந்தவர்கள் நான்கு வருடத்தில் அரசாங்க சேவையில் இரண்டாம வகுப்புப் பரீட்சையைச் சிங்களத்தில் மாத்திரம் எடுக்கலாமென்ற சட்டமும் இயற்றப்பட்டுள்ளது எனவே எட்டாம் வகுப்புச் சிங்கள அறிவுடைய தமிழ் ஊழியர்கள் சிங்களத்தையே தாய்மொழியாகக் கொண்ட ஊழியர்களுடன் போட்டியிட முடியாது" என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் கொற்றாவத்தை வாலிப முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழ் இளைஞர்கள் அரசாங்க சேவையை நம்பாது சுயமான கைத்தொழில், விவசாயத் துறைகளில் ஈடுபடவேண்டும். சமீபத்தில் நடைபெற்ற அப்போதிக்கரி, எழுதுவினைஞர், டாக்டர், எஞ்சினியர் பரீட்சைகளில் சிங்களவர்களே கூடுதலாக எடுக்கப்பட்டுள்ளனர். இந்நாட்டில் உயர்ந்த பதவிகள் தமிழ் மக்களுக்குக்கிடைக்குமென்பது பகற்கனவே தமிழ் ஊழியர்களுக்கெனத் தனியான தொழிற்சங்கங்கள் அமைக்கப்படவேண்டும். நமது மொழியும் கலாச்சாரமும் காக்கப்படவே நாம் தனியாகத் தொழிற் சங்கமமைத்தோம்"

உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி பேசுகையில்: 'தமிழருக்கென்று ஓர் நாடு இல்லாத காரணத்தினால்தான் உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழ்மக்கள் அளவற்ற கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்றும் தமிழரிடையே பரவலான விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டதால் நம் கஷ்டங்கள் தீரும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றும் கூறினார்.

வாலிபமுன்னணியின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. செல்வராஜா, உபதலைவர்: திரு. பொ. கணேசலிங்கம், செயலாளர்: திரு. க. கந்தவனம், உபசெயலாளர்: திரு. மு. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: திரு. சி. சிவகுருநாதன், ஐவர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

"தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தல்"

மூதூரில் ஜி. ஜி.

மூதூர், வியாழன்

"தமிழரசுக் கட்சியினரை இம்முறையும் தெரிவுசெய்து அனுப்பினால் தமிழ்பேசும் மக்களின் நிலை மேலும் மோசமடைந்துவிடும். இம்முறை நடைபெறும் தேர்தல் அதி முக்கியமானதும் தமிழ்பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடியதுமாகும்" என்று அகிலஇலங்கை தமிழ்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மல்லிகைத்தீவு என்னுமிடத்தில் நடந்த தமிழ்காங்கிரஸ் தேர்தல்பிரசாரக்கூட்டத்தில் கூறினார்.

கூட்டம் தமிழ்க்காங்கிரஸ் மூதூர் வேட்பாளர் திரு. எஸ். எஸ். ஆறுமுகத்தை ஆதரிக்குமுகமாக நடைபெற்றது.

உடுப்பிட்டி முன்னாள் எம்.பி திரு. சிவசிதம்பரம், மூதூர் வேட்பாளர் ஆறுமுகம், ஸ்ரீதரன் ஆகியோர் உரையாற்றினர்.

— —

தேர்தல் பிரசாரக் கூட்டங்கள்

கட்டுகுறுந்தை

'பொருட்கள் பற்றாக்குறையான நிலை இப்போதில்லை, யு. என். பி. சார்புள்ள வர்த்தகர்கள் பதுக்கிவைத்துக் கொண்டிருப்பதாலேயே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது' என நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா களுத்துறை தொகுதியில் போட்டியிடும் திரு. சம்லி குணவர்த்தனவை ஆதரித்து கட்டுகுறுந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பதுளை

'பின் கதவால் நுழைந்தாலன்றி மார்க்ஸீயவாதிகள் ஒருபோதும் இந்த நாட்டில் பதவிக்கு வரமாட்டார்களென காலஞ்சென்ற திரு. எஸ. டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஒரு தட்வை கூறியிருந்தார். இங்கு என்ன நடைபெறப்போகுதென்பது பற்றி திரு. பண்டாரநாயக்கா முன்னோடியாகவே தெரிந்து வைத்திருக்கவேண்டும்போலத் தோன்றுகிறது. தாம் நினைத்தது தமது மனைவியார் மூலமாகவே சரியாகிவிட்டது என அவரது ஆவி இப்போது அறியும்.'

இவ்வாறு யு. என். பி. யின் உப தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதுளையில், பதுளைத்தொகுதியில் யு. என். பி. சார்பில் போட்டியிடும் திரு. எச். எம். ஜினதாஸாவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வேருவலை

'பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷனின் அறிக்கையை வெளியிட்டால் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவிடம் உண்மை விஸ்வாசம் கொண்டுள்ள மக்கள் தற்போதைய பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவையும் அவரது சகாக்களையும் வெளியேற்றிவிடுவார்கள். இதனையறிந்தே பிரதமர் கமிஷனின் அறிக்கையை வெளியிடத் தயங்கினார்' என பேருவளையில் நடைபெற்ற யு. என். பி. யின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய வித்யோதய பல்கலைக் கழகத்தின் ஜனநாயக மாணவர் கழகத் தலைவர் வண பத்தேகம ஆனந்ததேரோ கூறினார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
PAUL NEWMAN
in M. G. M's
THE PRIZE
(Panavision - Metrocolor)

"தேசிய ரீதியில் தமிழர் பிரச்னைகளையும் 'தீர்ப்போம்"

சுதுமலையில் பேர்னாட் சொய்சா

யாழ்ப்பாணம், வெள்ளி

பண்டா-செல்வநாயகம் ஒப்பந்தத்தைவிட தமிழ்மக்களுக்கு அதிக பயனைக் கொடுக்கக்கூடிய நியாயமான உரிமைகளையும் முக்கியமான பிரச்னைகளையும் எமது கூட்டரசாங்கம் நிச்சயம் தீர்த்து வைக்குமென்று நேற்று முன்தினம் சுதுமலை ஈஞ்சலடி வைரவர் கோவிலடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கொழும்பு தெற்கு எம். பி. திரு. பேர்னாட் சொய்சா பேசுகையில் தெரிவித்தார்.

உடுவில் தொகுதி ஐக்கிய இடதுசாரி வேட்பாளர் திரு. பொ. நாகலிங்கத்தை ஆதரிக்குமுகமாக திரு சே. சிவஞானத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சொய்சா மேலும் கூறியதாவது-

தமிழ்மக்களுக்கென பல தனிப் பிரச்னைகளும் முக்கியமான உரிமை கொடுக்கப்படாமல் இதுவரை காலமும் மறுக்கப்பட்டு வந்ததென்பதை நாம் உணர்கிறோம். அதே நேரத்தில் இலங்கையைப் பொறுத்தவரையில் பல தேசியப் பிரச்னைகள் இன்னுமே தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படியான தேசியப் பிரச்னைகள் தீர்க்கப்படும்போது தமிழர்களுடைய பிரச்னைகள் எல்லாம் தானாகவே தீர்க்கப்படுமென்பதைத் தான் கூட்டரசாங்கம் வலியுறுத்துகிறது.

பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது அதை எதிர்த்தவர்கள் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவர்களின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும்தான் என்பதைத் தமிழரசுக்கட்சியினர் மறந்து எங்கள் கூட்டரசாங்கத்தை அவர்களுடன் சேர்ந்து வீழ்த்தினார்கள். அப்படி எமக்கு எதிராக இயங்கி வந்த தமிழரசுக்கட்சியினர் இன்று கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாஎன்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வியை இவர்கள் என்ன உரிமையுடன் கூட்டரசாங்கத்திடம் கேட்கிறார்கள்? தமிழரசுக் கட்சி கேட்டாலென்ன கேட்காவிட்டாலென்ன தமிழ்ப்பகுதிகளிலிருந்து இடதுசாரி அபேட்சகர்களை அனுப்பாதுவிட்டாலும்கூட தமிழர்களது எந்த நியாயமான பிரச்னைகளையும் கூட்டரசாங்கம் தீர்த்து வைக்குமென உறுதி தருகிறோம்."

உடுவில் தொகுதி அபேட்சகர் திரு. பொ. நாகலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"1926-ம் ஆண்டு பொன்னம்பலம் இராமநாதன் சட்டநிர்ணய சபையில் வரவு—செலவு விவாதத்தின் போது பேசுகையில் தேசிய ரீதியாகத்தான் குறைகளைச் சுட்டிக்காட்டினார். முதலில் புத்தளத்திலுள்ள குறைபாட்டையும், பின் நுவரேலியாவின் தேவையையும், கடைசியாகத்தான் கிளிநொச்சி, யாழ்ப்பாணப் பகுதிகளின் குறைபாடுகள் பற்றியும் பேசினார். அவர் ஒரு தமிழராக இருந்துகூட பிரச்னைகளைத் தேசிய ரீதியாகத்தான் அலசி ஆராய்ந்தார், ஆனால் தமிழரசுக் கட்சியினர் தமிழர்—சிங்களவர் என்ற இன அடிப்படையில்தான் பிரச்னைகளை அணுகுகிறார்கள். எமது கூட்டரசாங்கம் எங்கள் பிரச்னைகளையும் தேசிய ரீதியாகவே தீர்த்துவைக்கும்."

சுன்னாகம் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத் தலைவர் திரு. எஸ். விஜயானந்தன், பருத்தித்துறை அபேட்சகர் திரு. மோதிலால் நேரு, திருவாளர்கள்: கே. சிவகுரு, எஸ. சிவசுப்பிரமணியம், அரிய நேசன் ஆகியோரும் பேசினர்.

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம் போன் 485)
தியேட்டரில் சில திருத்த வேலைகள் நடைபெறுவதால் சில நாட்களுக்கு காட்சி காண்பிக்கப்படமாட்டாது.

2- வது மாதம்
கிங்ஸ்லி (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30.
பிளாஸா (வெள்ளவத்தை)
வெம்பிளி (கண்டி)

ஜெமினி கணேசன்
சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
கற்பகம்

கைத்தறி சேலைகள்

80, 100, 120-ம் நம்பர் நூல்களில் எமது சொந்தத் தறிகளால் தேர்ச்சிபெற்றவர் களைக்கொண்டு டிசைன்கள் போட்டு தயார் செய்த சேலைகள் மலிவான விலைகளில் விற்பனைக்கிருக்கின்றன.

எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.

அறிவித்தல்

11-வது ஆண்டு நிறைவு விழாவையும், தமிழ், சிங்கள புதுவருடத்தையும் முன்னிட்டு மிகப் பிரசித்திபெற்ற சன்றுகம் பிறின்ஸ் 25-4-65 வரை அரைச்சலார். 1667

பண்டசாலைப் பொறுப்பாளர் தேவை

இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கத்தின் கிளை ஸ்தாபனங்களுக்கு இரு பண்டசாலைப் பொறுப்பாளர்கள் தேவை. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் 20-3-65 நண்பகல் 12 மணி வரை சங்கத் தலைவர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பக்காரர் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

சம்பளம்: மாதவேதனம் ரூபா 90-00 மாதத்தில் ரூபா 2000-00 க்கு மேற் பட்ட விற்பனைக்கு 5% "கொமிஷனும்" வழங்கப்படும்.

வயது: 23 தொடக்கம் 40 வரையும்.

தராதரம்: J. S. C. சித்தியடைந்திருக்க வேண்டும். இத்துடன் கூட்டுறவுத் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கம் ரூ. 1000/- உறுதிப்பிணை ரூ. 1500/-

விண்ணப்பக்காரர் 2 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும், நேர் முகப்பரீட்சையில், தராதரப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் முதலியன பார்வையிடப்படும்.

க. கணேசதாசன்,
நிர்வாகக் காரியதரிசி.

இரணைமடு மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.
10-3-65.

1672

திரு. முத்தையாபிள்ளை செல்லத்துரை ஞாபகார்த்த திருவாசக மன்றத் திறப்பு விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னை அதிபர் திரு. வி. மு. ஆசைப்பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்படும்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்விகற்று, உரும்பராய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகளில் ஆசிரியப் பணி செய்து, இளைப்பாறி, 23-2-64-ல் சிவபதம் அடைந்த திரு. மு. செல்லத்துரை ஆசிரியரின் ஞாபகார்த்த திருவாசக மன்றத் திறப்பு விழா அராலி மேற்கிலுள்ள கந்தணுனியார் கோவில் முன்றலில் 13-3-65 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெறும். இவ்வைபவத்தில் அன்னாரிடம் கல்விகற்ற மாணவமாணவிகளையும் நண்பர்களையும் உற்றார் உறவினர்களையும் தவறாது சமுகந்தந்து இவ்வைபவத்தை சிறப்பித்து ஏகுமாறு மிகவினயத்துடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

மு. பொன்னுத்துரை ஆசிரியர், அராலி-மேற்கு வட்டுக்கோட்டை. 1644

சிறு விளம்பரம்

தேவை

(1) போட்டோ பிறின்டிங் வேலை தெரிந்தவர்கள் உடனே தேவை. (2) ஆர்டர்கள் சேகரிப்பதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாத வருமானம் ரூபா 150-00 நேரில் வரவும். கலாசோதி இன்டஸ்ரீஸ், (பஸ் நிலையத்திற்கு முன்பாக) 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1775

அங்கத்தவர்கள் தேவை

தீவுப்பகுதி ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம், கரம்பொன், ஊர்காவற்றுறை. அங்கத்தவராய்ச் சேர்ந்துவிட்டீர்களா? பங்குகள் விநியோகிக்கப்படுகின்றன. செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். 1772

விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1745

விற்பனைக்கு

இ. என். தொடர் உள்ள பி. எஸ். ஏ. 25 மோட்டார் சைக்கிள் விலைக்குண்டு. நல்லூர் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதி, 167/2 இலக்க வீட்டில் பார்க்கலாம். 1778

புதுக்குடியிருப்பு; பழமாத்தளனில் தற்போது செய்கையில் உள்ள 45 ஏக்கர் நெற்காணி பகுதிகளாகவும் விற்கப்படும். சி. பாலசுப்பிரமணியம், 54, 8-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1777

கார்-அச்சுமெசின் விற்பனைக்கு

ஒரு பழைய ஒஸ்டின் 10, ஒரு டபிள் கிறவுன் நல்ல சிலிண்டர் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1776

தேவை

பிணைப்பணம் கட்டக்கூடிய மனேஜர், காஷியர், பார் கீப்பர் தேவை; விண்ணப்பிக்கவும். காரியதரிசி, அரோஸ் கிளப், 855, காவலர் ஷேட்; யாழ்ப்பாணம். 1781

வாடகைக்கு

நாச்சிமார் கோவில் வீதியில் மின்சார, தண்ணீர் வசதிகளுடன் கூடிய புதிதாகக் கட்டப்பட்ட 3 அறைகளுடைய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: பொன்னுத்துரை 50, நாச்சிமார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 1732

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, 149-ம் இலக்கத்தில் 4 பரப்புக் கட்டடக்காணி இரு பகுதிகளாக விற்பனைக்குண்டு; விண்ணப்பிக்கவும்: ஆர். சபாரத்தினம், 149, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1780

சுகர்ணோ

ஜாகர்த்தா, மார்ச் 11

மலேசியா விஷயத்தில் ஒரு அமைதித் தீர்வைத் தாம் விரும்புவதாயும், ஆனால் இந்தோனேஷிய கொரில்லாக்களை தாம் வாபஸ் பெற முடியாது என்றும் ஜனாதிபதி சுகர்னோ கூறினர்.

பேச்சு, சங்கீதம் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். நகர ஆசிரிய சங்கத்தினரால் நடாத்தப்பட்ட 1965-ம் ஆண்டு பேச்சு சங்கீதப் போட்டி முடிவுகள்:-

ஆங்கிலம்

ஆண்கள் (கீழ்ப்பிரிவு): எஸ். ஜெயசீலன் யாழ் மத்திய கல்லூரி, ஏ. ஜி. போல் றிபேக் கல்லூரி, வி. டில்குமார் சென் ஜோன்ஸ கல்லூரி, மத்திய பிரிவு: எஸ. ராஜாராம் யாழ் மத்திய கல்லூரி. ஏ. யோகசுந்தரம்-சென் ஜோன்ஸ கல்லூரி' ஜே. டி. யோகேந்திரன் யாழ் மத்திய கல்லூரி, மேற்பிரிவு: என். பாலகுமார் யாழ் மத்திய கல்லூரி, எஸ. இந்திரன் யாழ் இந்துக் கல்லூரி, ஜே. எஸ. போல் றிபேக கல்லூரி'

பெண்கள் (கீழ்ப்பிரிவு). எம்; சித்திரா றிபேக கல்லூரி, எஸ. நிர்மலா வேம்படி பெண்கள் கல்லூரி, என். நளினி றிபேக் கல்லூரி, மத்திய பிரிவு: ஜி. சுவெலதிரினி வேம்படி பெண்கள் கல்லூரி. இ. வசந்தி வேம்படி பெண்கள கல்லூரி, ஆர். உமையாள் வேம்படி பெண்கள் கல்லூரி, மேல் பிரிவு: ஏ. நிர்மலா வேம்படி பெண்கள் கல்லூரி, எஸ. தேவதாயா வேம்படி பெண்கள் கல்லூரி, ஆர். விநோதினி வேம்படி பெண்கள் கல்லூரி.

தமிழ்

ஆண்கள் (கீழ்ப் பிரிவு): கே. கனகராசா யாழ் மத்திய கல்லூரி, எஸ. ஜெயசீலன் யாழ் மத்திய கல்லூரி, ரி. ரஞ்ஜித குமார் சென் ஜோன்ஸ கல்லூரி, மத்திய பிரிவு: எஸ. ராஜாராம் சென் ஜோன்ஸ கல்லூரி, வி. இளங்கோ பரமேஸவராக் கல்லூரி, ஆர் இராஜகுமார் சென ஜோன்ஸ கல்லூரி, மேற்பிரிவு: கே. சிவானந்தன் யாழ் இந்துக் கல்லூரி, சி. அம்பிகைபாகன் சென் ஜோன்ஸ கல்லூரி, எஸ. வி. நடராசா வரணி மகாவித்தியாலயம்.

பெண்கள் (கீழ்ப்பிரிவு): ஆர். ரஞ்சனு வேம்படி பெண்கள் கல்லூரி, எஸ. நிர்மலா பரமேஸவராக் கல்லூரி, எஸ. பரனமாத்தினி கொக்குவில் இந்துக் கல்லூரி, மத்தியபிரிவு: ஆர். ரதி வேம்படி பெண்கள் கல்லூரி, ஏ. கிபோவித்தா கனகரத்தினம் எம் எம் வி, ஆர் சாந்தா வேம்படி பெண்கள் கல்லூரி, மேற்பிரிவு: வி, இரத்தினேஸவரி வேம்படி பெண்கள் கல்லூரி, எம். அன்னலக்ஷ்மி பரமேஸவராக் கல்லூரி, ஏ. ராஜேஸவரி வேம்படி பெண்கள் கல்லூரி.

சங்கீத முடிவுகள்

ஆண்கள் கீழ்ப்பிரிவு (தனிப் பட்டவர்கள்): எஸ. ரவீந்திரன் யாழ் இந்துக் கல்லூரி, பி. உமாபதி யாழ் இந்துக் கல்லூரி, எஸ. மாணிக்கராசா யாழ் இந்துக் கல்லூரி, மேற்பிரிவு: எஸ ஸ்ரீதயாளன் கொக்குவில் இந்துக்கல்லூரி, எஸ். சுப்பிரமணியம் வரணி எம். வி, கீழ்ப்பிரிவு பகுதி: யாழ் இந்துக் கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, பெண்கள் கீழ்ப்பிரிவு (தனிப்பட்டவர்கள்) எஸ். கமலாவதி றிபேக் கல்லூரி, பி. ஜெயந்தி கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ். பாதகுமாரி வேம்படி பெண்கள் கல்லூரி, மேற்பிரிவு (தனிப்பட்டவர்கள்) எஸ், அருந்ததி வேம்படி பெண்கள் கல்லூரி, எஸ். நாகம்மா வரணி எம். வி. கே யசோதா தேவி கொக்குவில் இந்துக் கல்லூரி கீழ்ப்பிரிவுப் பகுதி வேம்படி பெண்கள் கல்லூரி, கனகரத்தினம் எம் எம் வி யாழ்ப்பாணம், வைத்தீஸ்வர வித்தியாலயம், மேற்பிரிவுப் பகுதி: வேம்படி பெண்கள் கல்லூரி

பாட்மின்டன் விளையாட்டுப் போட்டி



யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. கட்டடத்துக்குப் பக்கத்திலுள்ள மைதானத்தில் நடைபெற்று வரும் யாழ்ப்பாண மாவட்ட 'பாட்மின்டன்' விளையாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 'பாட்மின்டன்' சுற்றுப் போட்டியில் அதிக உற்சாகம் காட்டப்பட்டு வருகின்றது.

இம் மாதம் 27-ம் திகதி இறுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்ற பின்னர் பகிரங்க போட்டிகளும் யாழ்ப்பாண மாவட்ட சுற்றுப் போட்டிகளும் இடம் பெறவிருக்கின்றன,

வெற்றிபெறும் வீரர்களுக்குக் கேடயங்கள் வழங்கப்படவிருக்கின்றன, இந்தக் கேடயங்களை மெஸேர்ஸ் ஓட்டோ ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரும் மெர்க்கன்டைல் வங்கி உத்தியோகஸ்தர்களும் வழங்கி முன்வந்துள்ளார்கள், இவர்கள் வழங்கவிருக்கும் கேடயங்களின் மாதிரியை மேலே காணலாம்.

சொறிநாய்கள் அதிகரிப்பு

காங்கேசன்துறை, வியா.

கன்னாச்சந்தையில் சொறி நாய்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் சந்தைக்கு வரும் மக்கள் பெரும் தொல்லைகளுக்குள்ளாகின்றனர். இதன்காரணமாக இவ் வழியால் செல்வதற்கு பாடசாலை மாணவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

நடு நிலை நாடுகளுடன் பிரதமர் தொடர்பு

கொழும்பு, வியாழன்

வியட்னும் விஷயம்பற்றி ஜனாதிபதி டிட்டோ, ஜனாதிபதி நாஸர், பிரதம மந்திரி திரு சாஸ்திரி ஆகியோருடன் இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தொடர்பு கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நீர் ஆராய்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 52 கல்லூரிகளில் தண்ணீர்ப்பரிசோதனைகள் நடைபெற்றுவருகின்றன விரைவில் தமிழ்ப்பிரதேசங்களில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பஞ்சம் சம்பந்தமாக நீர்ப்பாசன இலாகா நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக 90 அடிக்குக் கீழ் நீரூற்று பிறிட்டுக் கொண்டு மேலே வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

புத்தளத்திற்கும் மன்னாருக்குமிடையேயுள்ள முள்ளிக்குள 'மறிச்சிக்கட்டி' என்னும் பகுதியில் 150 அடி ஆழமான நிலத்திற்கு குழாய்கள் செலுத்தப்பட்டு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன 90 அடி ஆழத்தில் காணப்படும் வெள்ளைக் கற்பாறைகளிலிருந்து நீரூற்று பிறிட்டுக்கொண்டு 20 அடிக்கு மேலாக எழுந்தது இதனைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ஆனையிறவிலும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நடத்தப்பட்டிருக்கின்றது

இம்மாதம் 1-ம் திகதி முதல் யாழ்ப்பாணத்திலுள்ள 52 உயர்தரக் கல்லூரிகளில் நீர்ப்பரிசோதனை நடாத்தப்படுகிறது. 1000 கிணறுகளின் நீர் அவ்வப் பகுதியிலுள்ள விஞ்ஞான ஆசிரியர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஒரு வருட காலத்திற்கு இந்த ஆராய்ச்சிதொடர்ந்து நடைபெறும். இந்த ஆராய்ச்சிகளின் போது இஸ்ரேல் நாட்டு நிபுணர்கள் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு உதவியளிப்பர்.

ரயில்நிலைய சூட்டுசம்பவம்

இருவர் கோட்டில் ஆஜர்

பம்பலப்பிட்டி, வியாழன்

களனி புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகசம்பவம் சம்பந்தமாக களனியிலுள்ள வெல்துவாவைச்சேர்ந்த ஜே பி குணசேகரா, கும்பனித்தெருவிலுள்ள ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் குமாஸ்தாவாகக் கடமையாற்றும் என் ஏ டி குணவர்த்தன ஆகிய இருவரும் கொழும்பு கூட்டுமாஜிஸ்திரேட் திரு பேர்ட்ரம் சேனரத்ன முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது இவர்களது வழக்கறிஞர் செய்துகொண்ட விண்ணப்பத்தின்பேரில் மாஜிஸ்திரேட் இவர்களை 11,000 ரூபா பிணையில்செல்ல அனுமதித்தார்

பொலிஸ இன்ஸ்பெக்டர் கே ஏச் டி பி நாணயக்கார வழக்கை நடத்தினர்

முருங்கனில் ராணுவ தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

முருங்கனில் சுமார் 50 ராணுவ வீரர்கள் சென்ற திங்கட்கிழமை இரவு அங்குள்ள வீடுகளுக்கு தீ வைத்துக்கொளுத்தியதோடு வீடுகளிலிருந்த மக்களைத் தாக்கியதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்,

இது சம்பந்தமாக மன்னார் பொலிஸாருக்கு இப்பகுதி கிராமசேவகர் தகவல்கொடுத்திருந்தார். இராணுவ வீரர்களின் இவ்வித தொல்லையால் முருங்கனிலுள்ள மக்கள் மிக்க பீதி அடைந்துள்ளதாக கிராம சேவகர் தெரிவித்துள்ளார்.

அருவியாறு முகாமைச்சேர்ந்த இராணுவ வீரர்களே இவ்வித தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

'கூட்டணி இடதுசாரிகளே தமிழரின் பிரச்னையை தீர்ப்பர்'

பலாலியில் நாகலிங்கம் பேச்சு

யாழ்ப்பாணம், வியா

"இம்முறை இடதுசாரிகளின் ஐக்கிய சோஷலிஸ அரசாங்கம் அமையப்போவது உறுதியாகிவிட்டது. பிற்போக்கு மனப்பான்மைகொண்ட கட்சிகளே இதை நன்கு உணர்ந்துவிட்டன. ஜனநாயகம் என்ற போர்வையில் சில பிற்போக்குக் கட்சியினர் தமிழ்மக்களைப் படுகுழியில் வீழ்த்தும் செயலில் ஈடுபட்டு நாட்டை நாசமாக்க எத்தனித்ததை முற்போக்குச் சக்திகள் எதிர்த்தார்கள். கே. எம். பி. ராஜரத்னாவும், பிலிப் குணவர்த்தனாவுமே மேற்குறிப்பிட்ட நாசகாரிகளின் தலைவர்களென்பதை உலகறியும். தமிழரசுக் கட்சியும் இவர்களுடன் கூட்டுச் சேர்வதன் நோக்கம்தான் எங்களுக்குப் புரியவில்லை. அதேபோன்று தான் திரு பொன்னம்பலத்தின் தலைமையில் சில காங்கிரஸ்வாதிகள் தங்களை அனுப்பினால் மூன்றே மூன்று வருடத்தில் தமிழர்களுடைய உரிமைகளைப் பெற்றுத்தந்துவிடுவோம். இல்லையேல் ராஜினாமாசெய்துவிடுவோமென்கிறார்கள், அப்படியென்றால் இவர்களது முன்றாண்டுத் திட்டம் முடிந்தபின்னர் உரிமைகிடைத்தாலென்ன கிடைக்காவிட்டாலென்ன பின்னர் தமிழர்களுடைய உரிமைகளுக்காகப் போராடமாட்டார்களென்பது வெளிப்படையாகிவிட்டது. எனவே தமிழ்மக்களின் சகல பிரச்சினைகளையும் சுமூகமான முறையில் தீர்ப்பதற்கு அன்றும் இன்றும் இனியும் பாடுபடப்போவது கூட்டணி இடதுசாரிக்கட்சிகளே."

இவ்வாறு காங்கேசன்துறைத் தொகுதி கம்யூனிஸ்ட்-சமசமாஜ கூட்டணி அபேட்சகர் திரு. வைகுந்தவாசனை ஆதரித்துப் பலாலியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசும்போது உடுவில் தொகுதி அபேட்சகர் திரு. பொன். நாகலிங்கம் கூறினார்.

திரு. வைகுந்தவாசன் பேசுகையில் கூறியதாவது.

"தமிழரசுக்கட்சி இதுவரை காலமும் தமிழ்பேசும் மக்களுக்குச் சமஷ்டியாட்சியே சிறந்ததென்று கூறிவந்தது; சமஷ்டியாட்சியினால் இந்தியாவில் என்ன நடக்கிறது? கனடாவில் என்ன நடக்கிறது? அமெரிக்காவில் என்ன நடக்கிறதென்பதைப் பத்திரிகை மூலம் வாசித்திருப்பீர்கள், இலங்கையில் இன்று தமிழரசார் சமஷ்டியாட்சி கூடாது பிரதேச சுயாட்சியே உகந்ததென்ற முடிவை வெளிப்படையாகச்சொல்லுமளவிற்கு வந்துவிட்டார்கள் எனவேகொள்கை மாறாமல் அதேவேளையில் நல்லதைச் செய்யும் கட்சி எமது கூட்டணிக் கட்சியே. கூட்டரசாங்கத்தின் மூலமே தமிழ் மக்களது பிரச்சனைகள் தீருமென்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள். நான் தெரிவு செய்து அனுப்பப்பட்டால் தமிழ் மக்களது குறிப்பாக காங்கேசன்துறைத் தொகுதி மக்களது பிரச்சனைகளைச் சுமூகமான முறையிலும்கண்ணியமான முறையிலும் தீர்த்துவைக்கத் தயங்கமாட்டேன் என உறுதியளிக்கிறேன்.

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில் "இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினர் இந்தச் சிறுபான்மைத் தமிழர்களுள் சாதி அடிப்படையில் இன்னொரு சிறுபான்மை இனமுண்டு. அந்தச் சிறுபான்மை இனத்தின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டு வருவது இடதுசாரிக் கட்சியே என்பதை எவராலும் மறுக்க முடியாது, எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர்இனம் சிங்களவரோ தமிழரோ எமக்குள் வேற்றுமை கிடையாது என சகோதர மனப்பான்மையோடு பழகிவருவது இடதுசாரிக் கட்சியே" என்றார்.

கோப்பாய்த்தொகுதி அபேட்சகர் திரு. எம். துரைராசா பேசும் போது இரு பெரும் பிரிவுகளுக்கிடையிலான போராட்டத்தை எதுசரி, எது பிழை என நிர்ணயிக்கும் பொறுப்பில் இன்று இலங்கை வாழ் மக்கள் இருக்கின்றனர் என்றும் நாட்டுக்கு நல்லதை செய்ய விளையும் இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளையா அல்லது நாசகாரச் சக்திகளாகிய கே. பி. இராசரத்தினா பிலிப் குணவர்த்தனா ஆகியோர் தழுவி நிற்கும்முதலாளித்துவ கும்பலையா இம்முறை ஆதரிக்கவேண்டுமென்பது மக்களைப் பொறுத்த முடிவு என்றார்.

திரு. என். விஜயானந்தன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

பாகிஸ்தான் அரிசி

பம்பலப்பிட்டி, புதன்

இம்மாதம் 4-ம் திகதி இலங்கை அரசாங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பாகிஸ்தான் இலங்கைக்கு 50,000 தொன் அரிசியை அனுப்பவிருக்கிறது.

சுகாதார வசதிகளுக்கு ரூ. 875,000 ஒதுக்கப்பட்டுள்ளது

பம்பலப்பிட்டி, புதன்

நாட்டிலுள்ள பதினைந்து பல்வேறு பகுதிகளுக்கு சுகாதார வசதிகள் செய்துகொடுப்பதற்காக உடனடியாக ரூ. 875,000 ஒதுக்குவதென சுகாதார இலாகா முடிவு செய்துள்ளது.

பல பகுதிகளிலுள்ள ஏழை மக்களின் வீடுகளில் மலசலகூட வசதிகள் இல்லாது இருப்பதால், மலசலகூட வசதிகளை சுகாதார இலாகா செய்துகொடுக்கவிருக்கிறது.

சுகாதார வசதிகள் செய்துகொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் கூடிய தொகையான ரூ. 56,000 கண்டிப் பகுதி பெறுகிறது. மற்றப்பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட விபரம் வருமாறு:-

கொழும்பு— ரூ 50,000, குருநாகல— ரூ 50,000, இரத்தினபுரி—ரூ 40,000 யாழ்ப்பாணம்-ரூ 30,000, கேகாலை ரூ25,000 களுத்துறை—ரூ 25, 000, புத்தளம்—ரூ 10,000, வவுனியா—ரூ 10,000, மட்டக்களப்பு—ரூ 10,000, மாத்தளை—ரூ8,000, அநுராதபுரம்—ரூ 8,000.

கைத்தொழிற் பொருட்காட்சி முடிவுற்றது

பம்பலப்பிட்டி, வியாழன்

கொழும்பு குதிரைப்பந்தய மைதானத்தில் 37 நாட்களாக நடைபெற்றுவந்த இலங்கை கைத்தொழிற் பொருட்காட்சி நேற்று நள்ளிரவுடன் முடிவுற்றது.

இப்பொருட்காட்சியை 30 லட்சம் மக்கள் பார்வையிட்டதாகவும் ஒவ்வொரு தினமும் சராசரி 75 ஆயிரம் மக்கள் பார்வையிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் இடதுசாரி அரசாங்கம் சாத்தியமில்லை

நந்தா அறிக்கை எதிரொலி

புதுடில்லி, மார்ச் 10

கேரளத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் இடதுசாரி கம்யூனிஸ்ட்டுகளைக் காவலில் வைக்கும் அரசாங்கத்தின் முடிவைப் பாதிக்கவில்லை என உள்நாட்டு மந்திரி திரு. நந்தா கூறினார்.

நாட்டுக்கு விரோதமான சதியிலீடுபட்டிருந்த அவர்களை காவலில் வைக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றும், தேர்தல் முடிவுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவு வருகிற 30-ம் திகதி முடிவடைவதால், அவர்களை மேலும் காவலில் வைக்கும் உத்தரவு பாதுகாப்பு, சிவில் பாதுகாப்பு, பந்தோபஸ்து ஒழுங்கு ஆகியவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்டதென்று நந்தா கூறினார்.

கேரள தேர்தல் 26 சதவிகித வாக்குகளையே இடதுசாரிக் கம்யூனிஸ்ட்டுகள் பெற்றிருக்கிறார்கள் என்றும்,சென்ற தேர்தலில் 44 சதவிகித வாக்குகளை அவர்கள் பெற்றார்கள் என்றும் நந்தா கூறினார்.

'ஒழுங்குடன் கல்லூரிக்கு செல்லுங்கள்'

மாணவருக்கு நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 20

'மாணவர்கள் கேடு விளைவிக்கும் முறையில் நடந்து கொள்ளாது ஒழுங்காக தமது கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டுமெனவும் மொழிப் பிரச்சனை சம்பந்தமான விஷயங்களை பொறுப்புள்ளவர்கள் கவனித்து வருவதால், தமது கடமையை உணர்ந்து மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டுமென தமிழ்நாடு கீழ்சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல் தலைவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இதனை வற்புறுத்தி மாணவர்கள் ஒழுங்காகக் கல்லூரி சென்று பயில ஆவனவற்றைச் செய்ய வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

கேரளத்தில்காங்கிரஸ் அரசாங்கம் அமைக்காது

பார்லிமெண்டரி சபைமுடிவு

புதுடில்லி, மார்ச் 11

கேரளத்தில் காங்கிரஸ் கட்சி மந்திரிசபை அமைப்பதில்லை என இன்று புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது. இந்த முடிவை காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜ் நிருபர்களிடம் அறிவித்தார்.

இன்று நடைபெற்ற காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு கூட்டத்தில் பிரதம மந்திரி திரு. சாஸ்திரி, உள்நாட்டு மந்திரி திரு. நந்தா ஆகியோர் கலந்துகொண்டனர். விசேஷ அழைப்பின் பேரில் கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கே. வி. ஆப்ரஹாமும், முன்னாள் முதன் மந்திரியும் தற்போதைய எம். பி. யுமான திரு. கோவிந்தமேனனும் பார்லிமெண்டரிக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கேரள நிலைமைபற்றி விவாதித்த காங்கிரஸ் பார்லிமெண்டரிக்கட்சி, அங்கு அரசாங்கம் அமைப்பதில்லை என்றும், எதிர்க்கட்சியாக இயங்குவதென்றும் ஏகமனதாகத் தீர்மானித்தது.

வருகிற 15-ம் திகதி கேரள சட்டசபையில் காங்கிரஸ்கட்சி அங்கத்தினர்கள் திருவனந்தபுரத்தில் கூடி, தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

காந்தி, சுபாஸ உருவச் சிலைகள்

புதுடில்லி, மார்ச் 10

மகாத்மா காந்தி, சுபாஸ் சந்திரபோஸ் ஆகியோரது உருவச்சிலைகளை டில்லியில் நிறுவுவது பற்றி ஆராயக் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வானொலிப் பெட்டி

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தினருக்குப் புதிய வானொலிப்பெட்டி ஒன்று அரசாங்கத்தினரால் வழங்கப்பட்டது. இவ்வானொலிப் பெட்டிக்குரிய பணத்தை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் கொடுத்துப் பெற்றுக்கொள்ளும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

புதிய தபால் நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஊர்காவற்றுறையில் நவீன வசதிகளுடன் அமைந்த புதிய தபால்நிலையம் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது. இலங்கையின் பன்னிரண்டு இடங்களில் புதிய தபால்நிலையங்களை அமைப்பதற்காக அரசாங்கம் 60 லட்ச ரூபாய்வரை ஒதுக்கியுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் 12 புதிய தபால் நிலையங்களில் ஒன்று மட்டும் ஊர்காவற்றுறையில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது இதற்கான வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்க மத்திய வித்தியாலயங்களில் கல்வி கற்பதற்கு சாதாரண வித்தியா விருத்திப்பணம் அளிப்பதற்கான பரீட்சை விண்ணப்பங்கள் இம்மாதம் 15-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வரைதான் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்தினமாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பாண்டுங், மார்ச் 10

இங்கு நடைபெற்ற ஆசிய-ஆபிரிக்க இஸ்லாமிய மகாநாட்டில் சீனா கொண்டுவந்த எதிர்ப்பு புறக்கணிக்கப்பட்டு ரஷ்யாவை முழு உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது.

திருமண அழைப்பு

தர்மலிங்கம்—

பத்மரஞ்சினிதேவி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திரு. திருமதி சின்னப்பு அவர்களின் புத்திரன் திரு. சி. தர்மலிங்கம் (உதவி மின்சார என்ஜினியர், அரசாங்க மின்சாரப் பகுதி, கொழும்பு) அவர்களுக்கும், யாழ்ப்பாணம் அரசாங்க ஆஸ்பத்திரி பிரதம அப்போதிக்கரி திரு. தா. சி. சோமசுந்தரத்தினதும், திருமதி. சோமசுந்தரத்தினதும் புதல்வி செல்வி பத்மரஞ்சினிதேவிக்கும் 'பத்மவாசா', இல: 29, சிவப்பிரகாச வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மணமகள் இல்லத்தில் பங்குனி 4-ம் திகதி (17-3-65) புதன்கிழமை காலை 11-00 மணிக்கும் நண்பகல் 12-00 மணிக்கும் இடையில் திருமணம் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள், தனித்தனி அழைப்புகள் அனுப்பப்படமாட்டாது.

1774

அருத எண்ணெய்
(அறுபதாம் பச்சையும்
வேறு 44 அரிய மூலிகைகளும் சேர்ந்தது)
கூந்தலை அடர்த்தியாகவும் நீளமாகவும் வளர்க்கும்.
தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும் தடுக்கும்.
பீனிசத்தை முற்றாக குணப்படுத்தும்.
மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப்
பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல்,
காது இரைச்சல், காதில் சீழ் வடிதல், அடிக்கடி
ஜலதோஷம் பிடித்தல், தும்மல், தலையிடி
ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.
சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்.
முழுப்போத்தல் ரூபா 10-00 அரைப்போத்தல் ரூபா 5-00
கால் போத்தல் ரூபா 3-00 2 அவு. போத்தல் ரூபா 1-00
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
தயாரிப்பாளர்:
வைத்தியர் பி. எம். திசாநாயக்க,
கம்பளை.
யாழ்ப்பாணத்திற்கு ஏகவினியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541)

இப்பத்திரிகை சுதநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.